# யூலை - 29 - சனி

### புனித மார்த்தா

### எழிலின் நிறைவாம் சீயோனின்று ஒளிவீசி மிளிர்கின்றார் கடவுள். திபா. 50:2

## முதல் வாசகம்: விடுதலைப் பயணம் 24 : 3 – 8

எனவே, மோசே மக்களிடம் வந்து ஆண்டவர் சொன்ன அனைத்து வார்த்தைகளையும் விதிமுறைகளையும் அறிவித்தார். மக்கள் அனைவரும் ஒரே குரலாக் "ஆண்டவர் கூறிய வார்த்தைகள் அனைத்தையும் நாங்கள் செயல்படுத்துவோம்" என்று விடையளித்தனர்.மோசே ஆண்டவரின் வாக்குகள் அனைத்தையும் எழுதி வைத்தார். அதிகாலையில் அவர் எழுந்து மலையடிவாரத்தில் ஒரு பலிபீடத்தையும், இஸ்ரயேலின் பன்னிரண்டு குலங்களுக்காகப் பன்னிரண்டு தூண்களையும் எழுப்பினார்.அவர் இஸ்ரயேல் மக்களின் இளைஞர்களை அனுப்பி வைக்க, அவர்களும் ஆண்டவருக்கு எரிபலிகள் செலுத்தினர். மாடுகளை நல்லுறவுப் பலிகளாகவும் ஆண்டவருக்குப் பலியிட்டனர்.மோசே இரத்தத்தில் ஒரு பாதியை எடுத்துக் கலங்களில் விட்டு வைத்தார். மறு பாதியைப் பலிபீடத்தின் மேல் தெளித்தார்.அவர் உடன்படிக்கையின் ஏட்டைஎடுத்து மக்கள் காதுகளில் கேட்கும்படி வாசித்தார். அவர்கள், "ஆண்டவர் கூறிய அனைத்தையும் நாங்கள் செயல்படுத்திக் கீழ்ப்படிந்திருப்போம்" என்றனர்.அப்போது மோசே இரத்தத்தை எடுத்து மக்கள்மேல் தெளித்து, "இவ்வனைத்து வார்த்தைக்குமிணங்க, ஆண்டவர் உங்களோடு செய்துள்ள உடன்படிக்கையின் இரத்தம் இதோ" என்றார்.

**பதில்பாடல் :** கடவுளுக்கு நன்றிப் பலி செலுத்துங்கள்

## நற்செய்தி : லூக் 10 : 38 – 42

அக்காலத்தில் இயேசு தொடர்ந்து சென்று கொண்டிருந்த போது ஓர் ஊரை அடைந்தார். அங்கே பெண் ஒருவர் அவரைத் தம் வீட்டில் வரவேற்றார். அவர் பெயர் மார்த்தா.அவருக்கு மரியா என்னும் சகோதரி ஒருவர் இருந்தார். மரியா ஆண்டவருடைய காலடி அருகில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.ஆனால் மார்த்தா பற்பல பணிகள் புரிவதில் பரபரப்பாகி இயேசுவிடம் வந்து, "ஆண்டவரே, நான் பணிவிடை செய்ய என் சகோதரி என்னைத் தனியே விட்டு விட்டாளே, உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவி புரிய அவளிடம் சொல்லும்" என்றார்.ஆண்டவர் அவரைப் பார்த்து, "மார்த்தா, மார்த்தா! நீ பலவற்றைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்.ஆனால் தேவையானது ஒன்றே. மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக்கொண்டாள் அது அவளிடமிருந்து எடுக்கப்படாது" என்றார்

**தியானம் :** நாங்கள், எதற்கு முன்னிடம் கொடுக்க வேண்டும், எவ்வாறான வாழ்க்கை வாழ்ந்து இறைவனின் சித்தத்தை நிறைவேற்றமுடியும் என்பதை தெளிவுபடுத்துகின்றது. அன்று மார்த்தா மரியா வீட்டிற்கு இயேசு சென்ற பொழுது மரியாளோ யேசுவின் பாதத்தில் அமா்ந்திருந்து அவா் கூறுவதைக் கேட்டுக்கோண்டிருந்தாள். ஆனால் மார்த்தாளோ பரபரப்பாக வீட்டு அலுவல்களில் ஈடுபட்டிருந்தார். எனவேதான் ஆண்டவரே "நான் பணிவிடை செய்ய என் சகோதரி தனியே விட்டு விட்டாளே" என்று முறையிடுகின்றாள். அதற்கு இயேசு மார்த்தா மார்த்தா நீ பல………….மரியாவோ நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள். அது அவளிடமிருந்து எடுபடாது" என்று கூறுகின்றார். (லூக்.10:42) இதன் நிமித்தம் நாங்கள் விளங்கிக்கொள்ள வேண்டியது நமக்குத் தேவையானது எது? தேவையற்றது எது என்பதை நாங்கள் முடிவு செய்ய வேண்டும். இதற்காக எங்களை வழிநடத்தும் தூய ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் அருட்சாதனங்கள் வழியாக ஆவியானவரைப் நாங்கள் பெற்றுள்ளோம். அதை நாங்கள் நினைத்துப் பார்ப்பதில்லை. காரணம் உலக மாயையானது எங்களை வளைத்துப்போட்டு விடுகின்றது. இதனால்தான் நாங்கள் கடவுளை மறந்து இறைவனைவிட்டு விலகி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அவ்வாறு வாழாமல் எவ்வாறான நிலையிலும் இறைவனை மறந்து வாழாமல், எப்பொழுதும் அவரை நினைவிற்கொண்டு நல்வழி நடப்போம்